# சபரகமுவ மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு

# சபரகமுவ மாகாண சபை

## <u>பதவி வெற்றிடங்கள்</u>

## சபரகமுவ மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் தணைக்களத்தில் விடுதிப் பொறுப்பாளர் III ம் வகுப்பிற்கு ஆடசேர்ப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - 2021

**தகைமைகள்**

(அ) விண்ணப்பதாரர் இலஙகைப் பிர ஜயாக இருக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பம கோரப்படும் நாளுக்கு முன் சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர வதிவிடமுடையவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் 03 வருட காலம் சபரகமுவ மாகாணத்தில் வசிக்காதவராக இருப்பாரானால், அவரது வாழ்க்கைத் தணை 03 வருட காலம் சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர வதிவிடமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ)விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் நாளில் 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) பின்வரும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(1) சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(2) க.பொ.த. (உயர்) தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடத்தில் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் சாதாரண ஆங்கில பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(வரையறுக்கப்பட்ட ஆடசேர்ப்புக்காக திணைக்களத்தின் கனிஷ்ட ஊழியர்களிடமிருந்து உள்வாரியாக விண்ணப்பங்கள் கோரப்படும்)

**சம்பள வகுதி இல.** MN 01-2016

**சம்பள அளவு:** ரூபா 27,140 - 10x300 - 11x350 - 10x495 - 10x660 - 45,540/-

**விண்ணப்பப் படிவங்கள்:**

- பின்வரும் மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- சகல விண்ணப்பப் படிவங்களும் 2021.03.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் "செயலாளர், சபரகமுவ மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு, சபரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.